முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 724**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**22.09.2021**, புதன்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவசியாக வாழும் தேசிகனே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பேராற்றல்பட சன்மார்க்கம் அருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
தரமான தொண்டர்படை உருவாக்கி
தரணியில் மேலவர்கள் துணைகள்படவே
3. துணைகள் பட கலியுக சிக்கலை விரட்டி
தூய்மையான ஞான யுகவாழ்வு மக்களுக்கு தர
பெருமைபட அறம் பெருக்கும் அண்ணலே
பிசகில்லா தொண்டர் படை கொண்ட ஞானியே
4. ஞானியே உன் தவமும் தர்மமும்
நாட்டிடுவேன் இந்த உலகத்தை காத்து வழிநடத்தும்
வழிநடத்தி உன் சக்தி கொண்டு தான்
வையகத்தை பெருமாற்றம் செய்து ஆறுமுகன் யான் காத்தருள்வேன்
5. அருளவே அரங்கனே ஆறுமுகன் என் சக்தி நீ
அளவற்ற தர்மசக்தி பெருக்கத்தாலே
பிழையற இந்த உலகில் உன் அவதார நோக்கம் வழி
பெருமாற்றம் இனிதே சடுதி காணக்கூடும்
6. கூடவே ஆறுமுகன் உந்தனுக்குள்
குறையில்லா எல்லா வளங்களும் தந்து காத்துவர
வருகின்ற அரங்கன் தர்மத்தாலும்
வளர்கின்ற அரங்கன் சன்மார்க்க கொள்கையாலும்
7. கொள்கையாலும் இந்த உலகம் மேல்நிலை பெற்று
குருஅரங்கன் வழிவழி ஞானியர்கள் உருவாகி
இல்லாமை போக்கி இந்த கலியுகத்தில்
எல்லா வளமும் கூடிட உலகமாற்றம்
8. மாற்றமதும் அரங்கஞானி வேண்டலால் இனிதே நடந்தேறும்
மகான் சுப்ரமணியர் யானும் தக்க பலமாக இருந்து
இந்த அற்புதத்தை நிகழ்த்தி அருள்வேன்
விளம்பிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–